[5th September 1958

SRI K. SATTANATHA KARAYALAR : கன்னியாகுமரி ஜில்லாவிலும், செங்கோட்டைத் தாலுகாவிலும், இன்னும் ரெவின்யூ டிப்பார்ட்மெண்ட்டிலிருந்து அனுப்பக் கூடிய நோட்டிஸ்கள், ரசீது முதலியவைகள் அத்தனையும் மலையாளத்திலேயே இருக்கிறது. அதையாவது உடனடியாக மாற்றி தமிழில் கொண்டு வர உத்தரவு பிறப்பிக்கப் படுமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இவைகள் சமீபத்தில் கேரளத்தில் இருந்து வந்த பகுதிகளாதலால் இதுமாதிரியான கஷடங்கள் இருக்கலாம். சிறுகச் சிறுக அங்குள்ள அதிகாரிகள் கூடிய சீக்கிரத்திலேயே இப்பொழுள்ளதை மாற்றிக்கொண்டு தமிழில் கடிதப் போக்குவரத்து செய்வார்கள் என்று நம்புகிறேன். சில இடங்களில் மலையாளம் இருக்கலாம் ; எல்லாம் மலயாளத்தில்தான் இருக்கிறது என்று சொல்ல முடியாது. இன்னொன்று, மற்ற மொழி பேசக் கூடியவர்கள் சில பகுதிகளில் ஓரளவு இருந்தால்கூட மற்ற மொழிகளிலும் நோட்டிஸ்கள் பிரசுரிக்க வேண்டுமென்ற தத்துவத்தை ஒப்புக்கொண்டிருக்கிறோம். ஆகவே மலையாளம் பேசக் கூடியவர்கள் அதிகமாக சில பகுதிகளில் இருப்பார்களேயானால் அங்கு தமிழ் அறிக்கையோடு மலையாள அறிக்கையும் கொடுக்கவேண்டுமென்று வைக்கபட்டிருக்கிறது.

SRI V. K. KOTHANDARAMAN : ஆங்கிலத்திலேயே வந்து கொண்டிருந்த கேள்விகள் இப்பொழுது தமிழிலும் வந்து கொண்டிருக்கிறது. ஆனால் பதில்கள் இன்னும் ஆங்கிலத்தில்தான் கொடுக்கப் படுகின்றன. அதற்கு காரணம் என்ன ? ஆகவே, இனி உடனடியாக பதில்களும் தமிழில் வருமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : வெகு சுலபமாகச் சொல்லி விடலாம், தமிழிலே செய்ய வேண்டுமென்று. உப கேள்விகளுக்கு பதில் சொல்லும்போதே தட்டுத்தடுமாறித்தான் பதில் சொல்ல வேண்டியிருக்கிறது. எனெனில் தமிழில் சரியான பதங்கள் உடனடியாக வருவது கஷ்டமாயிருக்கிறது. அதோடு இன்னொரு முக்கிய விஷயம் இருக்கிறது. அதாவது, ஒரு பகுதியில் இருந்து மட்டும் தமிழை அபிவிருத்தி செய்து விடலாம் என்று நினைப்பது தவறு. நிர்வாகத்தில் தமிழை உபயோகிக்க வேண்டுமென்று சொன்னால், போதனாமுறை தமிழில் இருந்தாலொழிய நிர்வாகத்தில் அதை உடனடியாகக் கொண்டு வருவது சிரமம். அதோடு தமிழ் எல்லாத் துறைகளிலும் வளர ஒரு முயற்சி எடுக்கவேண்டியது அவசியம். அதுபற்றி சர்க்கார் பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது. கூடிய சீக்கிரத்தில் தமிழ் வளர்ச்சி எல்லாத் துறைகளிலும் ஏற்படுத்துவதற்கான முறையில் ஒரு திட்டத்தை வெளியிட முடியுமென்று நினைக்கிறேன்.

Sreepadam lands

* 64 *Q.*—SRI T. T. DANIEL : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) whether the Kerala Government have sent to this Government a Bill regarding the Sreepadam lands in the Kanyakumari district and the Shencottah taluk ; and

(*b*) whether the Madras Government have expressed their opinion on the Bill to the Kerala Government?

THE HON. SRI M. A. MANICKAVELU : (*a*) The Government of Kerala have not sent any Bill for the opinion of this Government.

(*b*) Does not arise.

5th September 1958]

SRI T. T. DANIEL : Sreepadam lands are lands in which the ex-Raj Pramukh, the erstwhile Ruler of the Travancore-Cochin State has some rights, although the patta stands in the name of the landholders and they have almost all the other rights. Will the Government think of the desirability of studying that problem and bring in some measure so that the rights of the ex-Raj Prumukh on those lands may be extinguished?

THE HON. SRI M. A. MANICKAVELU : Yes, Sir, the matter is being looked into. Now a major part of that income is spent on the temple. How best the amount of Rs. 30,000 required for the management of the temple could be found, whether the whole amount should be given by the Travancore-Cochin Devosum and the management looked after or a proportionate share given to the Madras Endowment Board and the management looked after, is under consideration.

Handloom cloth

* 65 *Q.*—SRI N. R. THIYAGARAJAN : கனம் கைத்தொழில் அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

கையால் நெசவு செய்த துணிதான் கட்டவேண்டுமென்று சட்ட திட்டங்கள் செய்ய சர்க்காருக்கு ஏதேனும் உத்தேசம் இருக்கிறதா ?

THE HON. SRI R. VENKATARAMAN : இல்லை, ஐயா.

SRI N. R. THIYAGARAJAN : ஸார், கைத்தறி நெசவுத் தொழிலை ஆதரிக்கவேண்டும் என்று சொல்லுகின்ற நேரத்தில் கைத்தறித்துணி உற்பத்தி செய்பவர்கள் கண்டிப்பாக கைத்தறி துணிகளைத்தான் கட்ட வேண்டும் என்று ஏதாவது ஒரு உத்தரவு போட முடியுமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : கைத்தறி நெசவு ஆடைகளை அதிகமாக விற்பனை செய்வதற்கு பல்வேறு முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகிறது என்பதை கனம் அங்கத்தினர்கள் அறிவார்கள். ஆனால் சட்டபூர்வமாக, மில் ஆடைகளை அணியக் கூடாது என்று சொல்லுவது நியாயமாக இருக்காது, நாட்டுக்கும் உகந்தது அல்ல.

* 66 *Q.*—SRI N. K. PALANISAMI : கனம் கைத்தொழில் அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) கைத்தறித் துணிகளை விற்பனை செய்யும் பொருட்டு ராஜ்ய வர்த்தக கார்ப்பொரேஷன் ஒன்றை **(State Trading Corporation)** அமைக்க 1958-ம் ஆண்டு ஏப்ரல் மீ 18-ம் தேதியன்று நடந்த முக்கூட்டு மாநாட்டின் போது ஆலைத் தொழிலாளிகள், ஆலை நிர்வாகஸ்தர்கள் இவர்களின் பிரதிநிதிகள் அரசாங்கத்தாருக்கு சிபாரிசு செய்தார்களா ?

(ஆ) அப்படியானால், அதன் விவரங்கள் யாவை ?

(இ) மேற்சொன்ன சிபாரிசை அமுலுக்குக் கொண்டுவருவதற்காக அரசாங்கத்தார் எடுத்துக்கொண்ட நடவடிக்கைகள் யாவை ?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) A suggestion to this effect was made.

(*b*) No details were discussed at the Conference.

(*c*) The matter is under consideration.